# திண்டுக்கல் நகராட்சி

## 2007–2008 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் நிர்வாகமும்

திண்டுக்கல் நகராட்சி 1.11.1866ம் நாள் தோற்றுவிக்கப்பட்டு, 23.1.1988ந் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறையின் 149 எண்ணிட்ட அரசாணையின்படி 1.4.1988ந் தேதி முதல் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு தொடர்ந்து இயஙகி வருகிறது.

### 2. ஆட்சி எல்கை

திண்டுக்கல் நகராட்சியின் மொத்த பரப்பு 14.01 சதுர கிலோ மீட்டராகும். 2001ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 1,96,619 ஆகும். இதில் ஆண்கள் 98969, பெண்கள் 97650. 2002ம்ஆண்டின் மத்திய ஆண்டு மக்கள்தொகை 202754 . இந்நகராட்சி 48 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அதில் 3 வார்டுகள் வார்டு எண்.26, 27, 44 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டது. இதில் வார்டு 26 தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி மொத்தம் 16 வார்டுகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறையின் உத்தரவின்படி 25.10.2006 தேதி நடைபெற்ற நகர் மன்றத் தேர்தலில் கீழ்க்கண்ட 48 நகர்மன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 25.10.2006 முதல் செயல்பட்டு வருகிறார்கள். 28.10.2006ம் தேதி நடைபெற்ற தேர்தலில் திரு. ஆர்.நடராஜன் அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திரு.வி.கல்யாண சுந்தரம் அவர்கள் நகர் மன்ற துணைத்தலைவராகவும் திரு.எஸ்.முகமது இப்ராகிம் அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திரு. ஆர்.பிச்சைமுத்து அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

| வார்டு எண் | நகர்மன்ற உறுப்பினர்களின் பெயர் | வார்டு எண் | நகர்மன்ற உறுப்பினர்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | திருமதி. செல்வி.எம் | 25 | திருமதி. ரோஜாம்மாள். |
| 2 | திரு. கல்யாண சுந்தரம்.வி | 26 | திரு. ஒண்டிமுத்து. சி |
| 3 | திருமதி. அழகுமீனா.எ | 27 | திரு. பாபு . எ. |
| 4 | திரு. ராமுத்தேவர்.பி | 28 | திரு. ராமமூர்த்தி. எஸ்.ஆர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | திரு. | நடராஜன் .ஆர் | 29 | திருமதி. | தமிழ்ச்செல்வி. ஆர் |
| 6 | திருமதி. | நாகலெட்சுமி.சி. | 30 | திரு. | விஜயகுமார். ஆர் |
| 7 | திரு, | ரஜினிகாந்த்.பி | 31 | திரு. | முகமது ரபீக். எம் |
| 8 | திரு. | மருதராஜ்.வி | 32 | திரு. | ஜான் பீட்டர்.எ |
| 9 | திரு. | பிச்சைமுத்து.ஆர் | 33 | திரு. | அழகர்சாமி.க |
| 10 | திருமதி. | மாரியம்மாள். கே | 34 | திருமதி. | ஜெயபாரதி. ஜி. |
| 11 | திரு. | ஆறுமுகம். எம் | 35 | திரு. | முகமது ரபீக். எம் |
| 12 | திரு. | ஆனந்த். ஆர். | 36 | திரு. | துளசிராம். எம் |
| 13 | செல்வி | அருள் வாணி. எ. | 37 | திருமதி. | ராமுத்தாய். எஸ் |
| 14 | திரு. | மோகன். பி | 38 | திரு. | உறபீப் முகமது . பீ |
| 15 | திரு. | நாகராஜன், எம். | 39 | திரு. | முகமது இபுறாகிம் . எஸ் |
| 16 | திரு. | முகமது சித்திக், எ. | 40 | திரு. | ராஜேந்திரன். ஆர்.வி |
| 17 | திரு. | ராஜப்பா, எஸ். | 41 | திரு. | அப்துல் ரஉறிம்.என் |
| 18 | திருமதி. | ஜெயந்தி, ஜெ. | 42 | திருமதி. | வசந்தி. த. |
| 19 | திரு. | ஜெயபாலன். எஸ். | 43 | திருமதி. | ஜெசிந்தா. சி |
| 20 | திரு. | தண்டபாணி எஸ். | 44 | திருமதி. | விஜயா. எஸ் |
| 21 | திருமதி. | தேன்மொழி.எ | 45 | திரு. | மார்த்தாண்டன். எ |
| 22 | திருமதி. | இளமதி.ஜெ | 46 | திரு. | கோபாலகிருஷ்ணன். எஸ் |
| 23 | திரு. | சார்லஸ் அந்தோணி. எஸ் | 47 | திரு. | ஸ்டாலின். எஸ் |
| 24 | திருமதி. | லெட்சுமி. எஸ். | 48 | திரு. | சந்திரசேகரன். எம் |

**3. பணியாளர்**

1.4.2007 முதல் 31.3.2008 முடிய திரு.எஸ்.மெய்யழகன் அவர்கள் ஆணையராகப் பணி புரிந்துள்ளார்.

1.4.2007 முதல் 20.7.2007முற்பகல் முடிய திரு.ஜி.கிருஷ்ணாநந்தன், கணக்கர் (கூடுதல் பொறுப்பு) மேலாளராகவும் , 20.7.07 பிற்பகல் முதல் 31.12.07 முடிய திரு ஏ.ஜி.பாட்ஷா அவர்கள் மேலாளராகவும், 1.1.2008 முதல் 10.2.08 முடிய திருமதி. கே.சத்திய ஷீலா, கணக்கர் அவர்கள் கூடுதல் பொறுப்பு மேலாளராகவும், 11.2.08 முதல் 31.3.08 முடிய திருமதி எஸ். சுரோஜா, உதவியாளர் அவர்கள் மேலாளர் கூடுதல் பொறுப்பாகவும் பணிபுரிந்துள்ளனர்.

## 4. கூட்டஙகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 28 வது பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி மொத்தம் 27 கூட்டஙகள் நடைபெற்றன. இதில் இயல்பு கூட்டஙகள் 12, அவசரக் கூட்டஙகள் 12 மற்றும் சிறப்புக் கூட்டங்கள் 3 ஆகும்.

பொதுவாக ஒவ்வொரு மன்றக்கூட்டத்திலும் வைக்கப்பட்ட பொருள்கள் அந்தந்த மன்றக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் மொத்தம் 717 பொருட்கள் முடிவு செய்யப்பபட்டுள்ளன.

## 5. மேலாளுகை

அறிக்கையாண்டில் நகராட்சி ஊழியர்களுக்கு ஆண்டு செலவு ரு.7,24,14,420. இச் செலவினம் சென்ற ஆண்டு ரூ. 6,82,78,081/– ஆகியுள்ளது. ஊழியர்களை தண்டிக்கும் விதிளை கடைப்பிடிப்பதில் குறையேதும் ஏற்படவில்லை. அறிக்கையாண்டில் அச்சுக் கூலியாகவும் எழுது பொருட்கள் வாஙகவும் செலவிடப்பட்ட தொகை ரூ.20,34,214/–

## 6. வழக்குகள்

அறிக்கையாண்டு முழுவதும் திரு. எஸ். ஜெகநாதன், இந்நகர் மன்ற வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.

| | |
|---|---|
| 1.4.2007ம் தேதியன்று நிலுவையிலுள்ள வழக்குகள் | 52 |
| அறிக்கையாண்டில் பெறப்பட்ட வழக்குகள் | 5 |
| மொத்தம் | 57 |
| 31.3.2008 முடிய முடிவு பெற்ற வழக்குகள் | 10 |
| 1.4.2008 ல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 47 |

<u>பொறியியல் பிரிவு</u>

## 7. பொறியியல் இலாகா பணிகள்

சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்குதல் வடிகால்வேலைகள், தெரு விளக்குகள், பூஙகாக்கள், தோட்டஙகள் சம்பந்தப்பட்ட பராமரிப்பு வேலைகள் முக்கியமானதாகும்.

## 8. இலாகா பணியாட்கள்

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் இருவகைப்படுவர்.

1. பொது மராமத்து பணியாளர்கள்
2. குடிநீர் விநியோக பணியாளர்கள்.

**<u>பொது மராமத்து பிரிவு பணியாளர்கள் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு</u>**

| | |
|---|---|
| நகராட்சி பொறியர் | 1 |
| உதவிப் பொறியர் | 2 |
| பட வரைவாளர் | 1 |
| பணி ஆய்வர்கள் | 1 |
| சாலைப் பணியாளர்கள் (என்.எம்.ஆர்.) | 4 |
| கேங மஸ்துார்கள் | |

**<u>அமைச்சுப் பணியாளர்கள்</u>**

| | |
|---|---|
| 1. உதவியாளர் | 1 |
| 2. இளநிலை உதவியாளர்கள் | 3 |
| 3. பதிவு எழுத்தர் | 1 |
| 4. அலுவலக உதவியாளர் | 1 |
| 5. காவலர் | 1 |

**<u>குடிநீர் விநியோக பணியாளர்கள் விபரமும் எண்ணிக்கையும்</u>**

| | |
|---|---|
| 1. உதவி பொறியாளர் | 1 |
| 2. குடிநீர் விநியோக தலைமை நிலைய கண்காணிப்பாளர் | 2 |
| 3. குழாய் ஆய்வர்கள் | 1 |
| 4. குடிநீர் குழாய் பொருத்துநர்கள் (முதல் நிலை) | – |

| | |
|---|---|
| 5. குடிநீர் குழாய் பொருத்துநர்கள் (இரண்டாம் நிலை) | 6 |
| 6. மின் பணியாளர்கள் (முதல் நிலை) | – |
| 7. மின் பணியாளர்கள் (2ம் நிலை) | 3 |
| 8. வடி தொட்டி இயக்குபவர்கள் | 3 |
| 9. நீரேற்று நிலைய துலக்குநர்கள் | 7 |
| 10.ஆழ் கேணி துப்புரவாளர் | – |
| 11.பில்டர் கூலி | – |
| 12.காவலர்கள் | 2 |
| 13.தோட்ட ஆள் | – |
| 14.தண்ணீர் லாரி ஓட்டுநர்கள் | 7 |
| 15.தண்ணீர் லாரி கிளீனர்கள் | 2 |
| 16.மின்பணி கண்காணிப்பாளர்கள் | 1 |

## 9. சாலைகள்

நகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் நெடுஞ்சாலை துறையினாலும், நகராட்சியினாலும் பராமரிக்கப்படுபவை என இரு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம் 27.00 கி.மீ.

நடப்பு ஆண்டில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம் 131.733 கி.மீ. அதன் விபரம் பின் வருமாறு :

| | |
|---|---|
| அ. தார்தள சாலைகள் | 98.311 கி.மீ. |
| ஆ. சிமிண்ட் சாலை | 24.070 கி.மீ. |
| இ. மண் சாலை | 9.352 கி.மீ. |
| மொத்தம் | 131.733 கி.மீ. |

சென்ற ஆண்டில் நகராட்சியில் பராமரிக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 131.733 கி.மீ. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த இனத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:

| | |
|---|---|
| 2005 – 06 | ரூ. 76.32 லட்சம் |
| 2006 – 07 | ரூ. 51.97 லட்சம் |
| 2007– 08 | ரூ. 81.77 லட்சம் |

நகராட்சிக்குச் சொந்தமாக கற்பாறைகள் ஏதும் இல்லை. நகரில் முதன்மையான சாலைகள் போதுமான அளவு அகலம் உள்ளதாகவே இருக்கிறது.

அனுமதியின்றி நிறுவப்பட்ட வரை கடப்புகள் நகராட்சியில் அவ்வப்பொழுது அகற்றப்பட்டது. முக்கியமான சாலை சந்திப்புகளில் போக்குவரத்து இடையூறுகள் இல்லாமல் இருக்க அவ்வப்பொழுது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் மானியத்தைக் கொண்டு 2007 – 2008 ம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

## <u>2007 – 2008</u>

## <u>நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகள்</u>

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு தொகை ரூ. லட்சத்தில் | எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் | செலவுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 47.50 | 20 | 27.46 |
| 2. | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 5.30 | 2 | 5.30 |
| 3 | சுவர்ண ஜெயந்தி திட்டம் எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஒய். | 12.25 | 9 | 7.35 |
| 4. | பனிரெண்டாவது மாநிலநிதிக்குழு | 20.00 | 2 | 20.00 |
| 5. | பொது நிதி | 105.30 | 61 | 63.50 |
| 6. | குடிநீர் நிதி | 38.90 | 42 | 18.50 |
| 7. | கல்வி நிதி 2007–08 | 38.80 | 10 | 8.80 |
| 8. | சிறுசேமிப்பு ஊக்க நிதி | 2.00 | 1 | 1.81 |
| 9. | வெள்ளநிவாரணப்பணி | 47.55 | 8 | 10.00 |
| 10. | நமக்குநாமே திட்டம் | 8.70 | 2 | – |
| 11 | சுமூகநலம் மற்றும் சத்துணவுக் கூடம் | 0.42 | 1 | 0.42 |

## 10. பொறியியல் கருவிகள்

அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில், கீழ் குறிப்பிட்டபடி வாகனஙகள் பராமரிக்கப்பட்டன.

### குடிநீர் லாரி வண்டிகள்

1. டி.என்.57—ஏ—3210
2. டி.என்.57—எச்—3129
3. டி.என்.57—ஏ—2782
4. டி.என்.57—ஏ—2186

கீழ்க்கண்டவாறு இதர வாகனஙகள் பராமரிக்கப்பட்டு வருகிறது

1. டி.என்.57—0444
2. டி.என்.57.எச்.3034
3. டி.என்.57.டி.9018
4. டி.என்.57. பி.6161

## 11. தெருவிளக்குகள் பராமரிப்பு

இந்நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மின் விளக்குகள் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | சோடியம் ஆவி விளக்குகள் | 856 |
| 2. | பாதரச ஆவி விளக்குகள் | 101 |
| 3. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 4904 |
| 4. | உயர் மின் விளக்கு கோபுரம் | 9 |
| | **மொத்தம்** | **5876** |

தெரு விளக்கு பராமரிப்பு பிரிவில் 6 மின் கம்பி பணியாளர்கள், 5 ஹெல்ப்பர்கள் பணியாற்றி வருகிறார்கள். அறிக்கையாண்டில் பணியாளர் ஊதியம் வகைக்கு ரூ.13,01,000/— செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் தெரு விளக்கு பராமரிப்பு செலவு மின் கட்டணம் மற்றும் புதிய மின் விளக்குகள், உதிரிச் சாமான்கள் மற்றும் பொறுப்புத் தொகை செலுத்தப்பட்ட வகையில் செலவு ரூ.78,95,910/— ஆகும். நாம்ஸ்படி டியூப் லைட் மற்றும் ஸ்டாட்டர் 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்படுகிறது. டியூப் லைட் சோக்கு ஒரு வருடத்திற்கு ஒரு சோக்கு மாற்றப்படுகிறது. சோடியம் 1 1/2 வருடத்திற்கு ஒரு சோடியம் பல்பு மாற்றப்படுகிறது. சோடியம் சோக்கு 2 வருடத்திற்கு ஒரு சோக்கு மாற்றப்படுகிறது.

**12 சிறு பாலஙகள், வடிகால்கள் பராமரிப்பு**

பொதுவாக திண்டுக்கல் நகரில் பல பகுதிகளில் கழிவு நீர் வடிகால்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் உள்ளது. மழை நீரை கடத்தி செல்ல தெரு சந்திப்புகளில் சிறு பாலஙகள் கட்டப்பட்டுள்ளது. இவைகள் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**13 பயணியர் விடுதி**

அறிக்கையாண்டில் 2ம் நிலை பயணியர் விடுதி நகராட்சியில் நன்கு பராமரிக்கப்பட்டது. மேற்படி விடுதியில் கீழே இரண்டு அறைகளும், முதல் தளத்தில் இரண்டு அறைகளும் உள்ளது. இவற்றை தவிர 7 அறைகள் கொண்ட சத்திரம் ஒன்று இருந்ததை நகராட்சி அலுவலர்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டு 1.6.77 முதல் நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பயணியர் விடுதி இந்நகருக்குள் வரும் நடுத்தர மக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மிக்க பயன் உள்ளதாக உள்ளது. முக்கிய பிரமுகர்கள், பலதுறை அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் தஙக உதவியாக உள்ளது.

பயணியர் விடுதி மூலம் நடப்பு ஆண்டில் நகராட்சிக்கு ரூ.1325/– வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. நகராட்சி பயணியர் விடுதி முக்கிய பிரமுகர்கள், பலதுறை அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் தஙக உதவியாக உள்ளது.

சென்ற ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருமானம் பின் வருமாறு:

| | |
|---|---|
| 2004 – 05 | ரூ.1300 |
| 2005 – 06 | ரு.1325 |
| 2006–2007 | ரூ.1375 |

**14. இட வசதியும், கருவிகளும்**

நகராட்சி மேல்நிலைப் பள்ளி 1 ம், உயர்நிலைப் பள்ளி 1 ம், நகராட்சி துவக்கப்பள்ளிகள் 15ல், நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடஙகளில் 14 பள்ளிகளும், 1 பள்ளி மட்டும் வாடகை கட்டிடத்திலும் ( நாகல்நகர் துவக்கப்பள்ளி ) தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**5. நிதி நிலைமை**

1.4.90 முதல் நகராட்சிப் பள்ளிகள் அனைத்தும் கல்வித் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது.

**16. பூங்காக்கள், அரஙகுகள்**

நகராட்சி பயணியர் விடுதியிலும், மலைக் கோட்டை அருகிலும் பூஙகாக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரில் உள்ள குமரன்பூஙகா கண்ணைக் கவரும் விதத்திலும், சிறுவர் சிறுமியர்களை கவரும் வகையில் குமரன் பூஙகா வடிவிலும், அமைப்பிலும் அழகுற அமைக்கப்படவும், பூஙகாவிற்குத் தேவையான விளையாட்டு சாதனஙகள் மற்றும் எல்லா மக்களையும் கவர்ந்திருக்கும் வகையில் கண் கவர் சிலைகள் திண்டுக்கல் நகர் நன்கொடையாளர்கள் மூலம் நிறுவப்பட்டது.பூஙகா நுழைவுக் கட்டணம் ரூ.1/ ம் சிறியவர்களுக்கு ரூ.0.50 ம் என்ற ரேட்டில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இப்பூஙகா பொது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது. பொதுமக்கள் பொழுதுபோக்கிற்கு உதவிடும் வகையில் உள்ளது.

**சத்துணவுத் திட்டம்**

திண்டுக்கல் நகராட்சியின் கீழ் 15 நகராட்சி ஆரம்பப் பள்ளிகளிலும், 1982ம் ஆண்டு முதல் ஏழை மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழஙகும் திட்டம் நடைபெற்று வருகிறது. 1984ம் ஆண்டு முதல் இத்திட்டம் மேலும் மேட்டுப்பட்டி நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும், நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் பயனடையும் வகையில் விரிவாக்கம் செய்து நடைபெற்று வருகிறது.

2007–2008 ம் ஆண்டில் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 15 நகராட்சி ஆரம்பப் பள்ளிகள் மேட்டுப்பட்டி நகராட்சி உயர்நிலைப்பள்ளி நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 17 பள்ளிகளில் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழஙகும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி சிறப்பாக நடைபெற 17 சத்துணவு அமைப்பாளர்களும் 18 சமையல்காரர்களும் 20 உதவியாளர்களும் ஆக மொத்தம் 55 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சத்துணவு வழஙகும் திட்டத்திற்காக அறிக்கையாண்டில் ரூ.10,74,736/– செலவழிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.8,61,552/– செலவழிக்கப்பட்டது. தினசரி பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2099. மேலும் அரசாணை (நிலை) எண்.20, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (ச.உ.தி–2) துறை நாள் 12.9.2001 ல் இத் திட்டத்தின் கீழ் மேலும் வாரத்திற்கு மூன்று முறை குழந்தைகளுக்கு முட்டை வழஙகப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில ஒவ்வொரு திஙகட்கிழமையும் ஒரு குழந்தைக்கு 20 கிராம் உருளைக்கிழஙகு வீதம் 0.16 பைசா செலவில் வெளிச்சந்தையில் வாஙகி

வேகவைத்து வழஙகப்பட்டு வருகிறது. வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஒரு குழந்தைக்கு 20 கிராம் பச்சைப் பயறு வேக வைத்து வழஙகப்பட்டு வருகிறது. வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஒரு குழந்தைக்கு 20 கிராம் வீதம் கருப்புக் கொண்டைக் கடலை (முழு உருவில்) வேகவைத்து வழஙகப்பட்டு வருகிறது.

## 17 மருந்தகம்

இந் நகராட்சியில் அறிக்யையாண்டிலும் 4 மருந்தகஙகள் பராமரிக்கப்பட்டு மருத்துவ வசதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. சித்த வைத்திய முறை மருந்தகஙகள் மூன்றும், ஆயுர்வேத முறையில் ஒன்றும் ஆக மொத்தம் 4 மருந்தகஙகள் கீழே குறிப்பிட்டுள்ள இடஙகளில் நகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. பேருந்து நிலையம் வாட்டர் டேஙக் அருகில்
2. பாலகிருஷ்ணாபுரம் நகராட்சி மருந்தகம்
3. பழனிரோடு நகராட்சி மருந்தகம்
4. பேகம்பூர் நகராட்சி மருந்தகம்

முதல் மூன்றும் சித்த வைத்திய முறை மருந்தகஙகள் பேகம்பூரில் உள்ள நகராட்சி மருந்தகம் ஆயுர்வேத முறையிலும் ஷை மருந்தகஙகள் ஒவ்வொன்றிலும் ஒரு மருத்துவ அலுவலரும் கீழ்க்கண்டவாறு பிற ஊழியர்களும் பணியாற்றுகிறார்கள்.

| வ. எ ண் | பணியாற்றுபவர்கள் | பேகம்பூர் நகராட்சி மருந்தகம் | பேருந்து நிலையம் வாட்டர் டேஙக் அருகில் | பழனி ரோடு நகராட்சி மருந்தகம் | ரவுண்ட் ரோடு நகராட்சி மருந்தகம் |
|---|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | 1 | 1 | 1 | 1 |
| 2 | மருந்தாளுநர் | --- | 1 | 1 | 1 |
| 3 | ஆண் செவிலிய உதவியாளர்கள் | 1 | 1 | --- | --- |
| 4 | பெண் செவிலியர் | 1 | --- | 1 | --- |
| 5 | சுத்தம் செய்யும் உதவியாளர் | 1 | 1 | --- | --- |

## 18 நோயாளிகள்

அறிக்கையாண்டில் ஒவ்வொரு மருந்தகத்திலும் சிகிச்சை பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| மருந்தகத்தின் பெயர் | சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. பேருந்து நிலையம் வாட்டர் டேங்க் அருகில் | 5815 |
| 2. பாலகிருஷ்ணாபுரம் மருந்தகம் | 11327 |
| 3. பழனிரோடு மருந்தகம் | 11613 |
| 4. பேகம்பூர் மருந்தகம் | 12850 |
| மொத்தம் | **41605** |

சென்ற ஆண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 41605 ஆகும்.

**19 இட வசதியும் கருவிகளும்**

மருந்தகங்கள் சொந்தக் கட்டிடங்களில் அமைந்துள்ளது. இம் மருந்தகங்களுக்குத் தேவையான துணைக் கருவிகள் போதுமானவையாக இருந்தன. அனைத்து மருந்தகங்களுக்கும் தேவையான மருந்துகள் அவ்வப்பொழுது நகராட்சியில் வழங்கப்பட்டது. அறிக்கையாண்டில் 4 மருந்தகங்களை பராமரிக்கவும் மற்றும் மருந்தகப் பணியாளர்களுக்கு ஊதியச் செலவும், அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| 2005 – 2006 | 20,30,652 |
| 2006 – 2007 | 23,66,763 |
| 2007 – 2008 | 23,66,652 |

**20. மகப்பேறு மற்றும் குழந்தை நலம்**

கீழ் குறிப்பிட்ட இடங்களில் மொத்தம் 5 தாய் சேய் நல விடுதிகளை இந்நகராட்சி தொடர்ந்து நடத்தி வருகிறது.

1. நகராட்சி அலுவலகத்தின் பின்புறமுள்ள கமலா நேரு மகப்பேறு இல்லம்
2. மேட்டுப்பட்டி நகராட்சி மகப்பேறு இல்லம்
3. நாகல் நகர் நகராட்சி மகப்பேறு இல்லம்
4. முத்தழகுபட்டி நகராட்சி மகப்பேறு இல்லம்
5செல்லாண்டியம்மன் கோவில் தெரு நகராட்சி மகப்பேறு இல்லம்

கமலா நேரு தாய் சேய் நல விடுதியில் 10 படுக்கைகளும், நாகல் நகர்தாய் சேய் நல விடுதியில் 9 படுக்கைகளும், மேட்டுப்பட்டி தாய் சேய் நல விடுதியில் 3 படுக்கைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. தாய் சேய் நல விடுதிகளை பராமரிக்க சென்ற ஆண்டு தாய் சேய் நல விடுதி சம்பளம் மருந்துகள் பராமரிப்பு செலவு ரூ.33,53,240/– செலவு ஆகியுள்ளது. நடப்பு ஆண்டு சம்பளம் மற்றும் மருந்துகள் பராமரிப்பு ரூ.31,84,872/– செலவிடப்பட்டது.

அறிக்கையாண்டில் கீழ் குறிப்பிட்ட அலுவலர்கள் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்கள்.

1. பெண் மருத்துவ அலுவலர் – 1
2. பகுதி சுகாதார செவிலியர் – 1
3. மகப்பேறு உதவியாளர்கள் – 15
4. பெண் துப்புரவாளர்கள் – 6
5. மகப்பேறு ஆயா – 9
6. அலுவலக உதவியாளர் – 1
7. காவலர் – 1

## 21 தாய் சேய் நல விடுதி பராமரிப்பு செலவு

2007–2008 ம் அறிக்கையாண்டில் நகராட்சி தாய் சேய் நல விடுதிகள் மூலம் 207 பிரசவஙகள் பார்க்கப்பட்டன. அறிக்கை ஆண்டில் பராமரிப்பு மான்யம் ஏதும் வரப்படவில்லை.

## 22. பிறப்பு மற்றும் இறப்பு விகிதம்

அறிக்கையாண்டில் மொத்தம் பதிவான பிறப்புகள் 9,545. அவற்றில் ஆண்கள் 5002, பெண்கள் 4543. அறிக்கை ஆண்டில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 1675. இவற்றில் ஆண்கள் 1019. பெண்கள் 656.

பலவகை நோய் காரணஙகளினால் நேர்ந்த இறப்புகளின் விபரஙகள் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | காசநோய் | 19 |
| 2 | நீரிழிவு (சர்க்கரை நோய்) | 48 |
| 3 | நிமோனியா விஷக் காய்ச்சல் | 11 |
| 4 | மஞ்சள் காமாலை | 5 |
| 5 | எய்ட்ஸ் நோய் | 11 |
| 6 | புற்று நோய் | 36 |
| 7 | இரத்த சோகை | 12 |
| 8 | மூளைக் காய்ச்சல் | 3 |

| | | |
|---|---|---|
| 9 | இருதய நோய் மற்றும் மாரடைப்பு | 289 |
| 10 | மூளையில் கட்டி | 5 |
| 11 | இரத்தக் கொதிப்பு | 10 |
| 12 | பாம்புக் கடி | 18 |
| 13 | விஷ விதை சாப்பிட்டு | 17 |
| 14 | பூச்சிக் கொல்லி மருந்து | 32 |
| 15 | குறைப்பிரசவம் | 10 |
| 16 | சிசு மரணம் | 49 |
| 17 | மகப்பேறு மரணம் | 2 |
| 18 | புரை ஓடிய தொற்று | 18 |
| 19 | ஆஸ்துமா | 9 |
| 20 | நுரையீரல் நோய் | 25 |
| 21 | சாலை விபத்து | 34 |
| 22 | மூச்சு திணறல் | 49 |
| 23 | சிறுநீரகக் கோளாறு | 28 |
| 24 | வயோதிகம் | 51 |
| 25 | வயிற்றுப் புண் | 5 |
| 26 | தலைக் காயம் | 8 |
| 27 | பெரியம்மை, காலரா | |
| 28 | தீக்காயம் | 51 |
| 29 | வாதநோய் | 5 |
| 30 | இதர காரணங்களால் | 805 |
| | | 1675 |

**<u>23. பெரியம்மை</u>**

2007–08 ம் ஆண்டில் பெரியம்மை நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது.

**<u>24. ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டம் விரிவாக்கம் 2ன் கீழ் குடும்ப நலம் மற்றும் நகர்புற நல மையங்கள்</u>**

1988–89ல் அரசாணை எண்.763. நாள்30.3.98 ஆணைப்படி பொது சுகாதாரம் மற்றும் நல மையத்தை நகர்புற நல மையங்களாக மாற்றி அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் 23.7.93–ம் தேதிய அரசு ஆணை எண்.1046ன்படி 5வது இந்திய மக்கள் தொகை திட்டமானது செயல் படுத்தப்பட்டு ஏழு மையங்கள் 5 மையங்களாக மாற்றி குடிசை வாழ் மக்களுக்கு சிறந்த முறையில் மருத்துவம் பார்க்க ஆவன செய்யப்பட்டது. மேட்டுப்பட்டி தாய் சேய் நல விடுதி மற்றும் கமலா நேரு தாய் சேய் நல விடுதி உலக வங்கி நிதியில் சீரமைப்பு செய்யப்பட்டது. மரியநாதபுரம் நகராட்சி பயணியர் விடுதி அருகில் நகர்நல மையம் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

**<u>நகர்புற நலமையங்கள் இயங்கி வரும் இடங்கள்</u>**

1. நாகல் நகர் மகப்பேறு இல்லம்
2. மேட்டுப்பட்டி மகப்பேறு இல்லம்
3.மரியநாதபுரம் (நகராட்சி பயணியர் விடுதி அருகில்)
4.கமலா நேரு மகப்பேறு இல்லம்
5.நகர்நல மையம்– பழனி ரோடு ( சித்தா மருந்தக கட்டிடம்)

**<u>இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் விபரம் பின்வருமாறு :</u>**

| | |
|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | 5 |
| 2.தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | 3 |
| 3.பகுதி சுகாதார செவிலியர் | 5 |
| 4.பல் நோக்கு சுகாதார பணியாளர்கள் | 20 |
| 5.கிளாஸ் 4 – பெண் பதியாளர்கள் | 5 |

2007– 2008ம் ஆண்டு திண்டுக்கல் நகராட்சியில் நகர்புற நல மையத்தின் செயல்பாட்டிற்கு சென்னை குடும்ப நலத் துறை இயக்குநர் அவர்கள் அறுவை சிகிச்சை மற்றும் தற்காலிக குறியீடு 1500 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் கடந்த ஆண்டை விட குடும்ப நலப்பணியில் சிறந்த முறையில் பணி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணி குறிப்பிட்ட எந்த அளவிற்கு அடைந்தனர் என்பதற்கு கீழே தரப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் விளக்கம் தருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் இப்பணியோடு, தாய் சேய் நலப்பணி, மலேரியா காய்ச்சல் நரம்பு சிலந்தி மற்றும் வெவ்வேறு நோய் கண்டவர்களையும் சந்தித்து மருத்துவம் பார்த்து வருகின்றனர்.

**<u>இம்மையம் அடைந்த இலக்கு</u>**

| | குறியீடு | அடைவு |
|---|---|---|
| 1. ஆண்/பெண் அறுவை சிகிச்சை | 1500 | 1029 |
| 2. தாய்மார்களுக்கு கருத்தடை வளைம் பொருத்துதல் | 1500 | 974 |
| 3.தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரை விநியோகித்தல் | | 2938 |
| 4. ஆண்களுக்கு நிரோத் வழங்குதல் | | 25030 |

இந்திய மக்கள் தொகைத்திட்டத்தின் கீழ் பணி புரியும் இதர செலவினஙகளுக்காக 2006–07ம் ஆண்டில் ரூ.40.20 லட்சம் மான்யத் தொகையாக பெறப்பட்டது.

**<u>25. நகர்புற மலேரியா திட்டம்</u>**

திண்டுக்கல் நகராட்சியில் கொசு ஒழிப்புத் திட்டத்தின் பகுதியாக, நகர்புற மலேரியா திட்டம் 1988 – 89 முதல் அமுலில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் கீழே குறிப்பிட்டபடி அலுவலர்களும், பணியாளர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

| | அனுமதிக்கப்பட்டது | நடப்பில் உள்ளது |
|---|---|---|
| 1.துப்புரவு ஆய்வர்(மலேரியா) | 1 | 1 |
| 2.களப்பணியாளர் | 1 | 1 |
| 3.ஜீப் ஓட்டுநர் | 1 | 1 |
| 4.பணியாளர்கள்(மலேரியா மஸ்துார்கள்) | 20 | 20 |

**<u>1. கொசு ஒழிப்புத் திட்டம்</u>**

இது பெரும்பாலும் மனிதர்களுக்கு தொல்லை தரக்கூடிய கியூலெக்ஸ் எனப்படும் கொசுக்களின் அபிவிருத்தியை கட்டுப்படுத்தும் பணியை மையமாகக் கொண்டது. இத்திட்டத்தில் இதுவரை கொசுக்கள் முட்டையிட்டு வளர்ச்சியடைய வாய்ப்புள்ள இடஙகளான எல்லா விதமான அசுத்தமான தண்ணீர் தேக்கஙகள், சாக்கடைகள், நச்சுத்தொட்டிகள் போன்ற எல்லா இடஙகளிலும் இக் கொசுக்களின் வளர்ச்சிப் பருவஙகளை அழிக்க வல்ல பேடக்ஸ் எனப்படும் பூச்சி கொல்லி மருந்தை தெளிப்பான்கள் மூலம் மேற்கண்ட இடஙகளில் தினந்தோறும் தெளித்து கட்டுப்படுத்தி வருகிறார்கள். மேலும் இக் கொசுக்கள் உற்பத்தி இடமான அரண்மனைக்குளம் தண்ணீர் தேக்க பகுதிகளிலும் மற்றும் இதர இடஙகளிலும் பூச்சி கொல்லி மருந்திட்டு அதனால் கொசு வளர்ச்சி தடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு கொசுக்களின் வளர்ச்சி பருவஙகளை, பூச்சி கொல்லி மருந்தால் கட்டுப்படுத்துதல் அல்லாமல் முழு வளர்ச்சி அடைந்த வீடுகளில் குடி கொண்டிருக்கும் கொசுக்களையும் ஓராண்டிற்கு ஒழிக்க விசைத் தெளிப்பான்கள் மூலமும் மருந்து தெளித்து கொசுக்கள் தொல்லையைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு ஓரளவு வெற்றியும் காணப்பட்டது.

**<u>2. மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம்</u>**

இத் திட்டத்தில் கீழ்க்கண்ட முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1. மலேரியா நோய் கண்டுள்ளவர்களை கண்டு பிடித்தல் (கண்காணிப்பு பிரிவு)

2. மலேரியா நோய்தான் என்று கண்டு பிடிக்கப்பட்டவர்களுக்கு அந் நோயிலிருந்து பூரண குணம் அளித்தல்

3. மேற்கொண்டு அப்பகுதிகளில் மலேரியா வராமல் தடுக்க நடவடிக்கை எடுத்தல்

4. பொதுவாக மலேரியா நோய் பரப்பும் கொசுக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துதல்.

மேலே குறிப்பிட்ட மலேரியா நோய் ஒழிப்பு பணியில் இதற்காக ஒரு சுகாதார ஆய்வர், மற்றும் பணியாளர்கள் 20 பேரையும் வைத்து மலேரியா நோய் கண்டுள்ளவர்கள் என சந்தேகப்படும் நபர்களின் இரத்த தடயல் எடுக்கப்பட்டது. இந்த இரத்த தடயல்கள் பரிசோதனை செய்யப்பட்டு மலேரியா நோய் என்று கண்டு பிடிக்கப்பட்டவர்களுக்கு இதற்காக சிகிச்சை அளிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் 23311 நபர்களுக்கு இரத்த பரிசோதனை செய்ததில் 12 நபர்களுக்கு மலேரியா என கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மலேரியா நோயாளிக்கும் 3 திங்கள் தொடர்ந்து மருந்து கொடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அப்பகுதியில் வேறு எவருக்கேனும் மலேரியா நோய் கண்டுள்ளதா என்பதை அறிய அந் நோயாளியுடன் வருபவர்களுக்கும் சுற்றுப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் இரத்த தடயஙகள் எடுத்து பரிசோதனை செய்யப்பட்டது. மலேரியா நோய் கண்டவர் வசிக்கும் வீட்டிலும் சுற்றுப் புற வீடுகளிலும் இந்நோய் பரவக் காரணமான கொசுக்களை ஒழிக்க கொசு மருந்து விசைத் தெளிப்பான் மூலமாகவும் அடிக்கப்பட்டு மலேரியா நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டது. இந்நோய் பரவக் காரணமாக உள்ள ***அனாபிலிஸ்*** வகை கொசுக்கள் வீடுகளில் உள்ள கிணறுகளிலும், நீர் தொட்டிகளிலும், மேல் நிலைத் தொட்டிகளிலும் கொசுக் கொல்லி மருந்து ***அபேட்*** தெளிக்கப்பட்டு, கொசுக்களின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது. கிணறுகளில் கொசு புழுக்களை உணவாகக் கொள்ளும் ***கம்பூசியா*** மீன்கள் விடப்பட்டது.

மேற்கூறிய கொசு ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ் புழு கொல்லி மருந்து தெளிப்பான் விளைவையும் ஆய்வு செய்யப்பட்டு அதற்கேற்ற முறைகளில் மாற்றஙகள் மேற் கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் ஒவ்வொரு மாதத்திலும் சராசரி 60 கி.மீ. துாரத்திற்கான சாக்கடைகளிலும் 942 கிணறுகளிலும் 1700 கொசு தொட்டிகளிலும் 5306 மேல் நிலை தொட்டிகளிலும் மேலும் 16343 சிமிண்ட் தொட்டிகளிலும் பொது இடஙகள் மற்ற கொசு உற்பத்தியாகும் இடஙகளிலும் கொசு புழுக் கொல்லிகள் தெளிக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட்டு அதன் நிலைக்கேற்ற விதத்தில் பணிமுறைகள் கையாளப்பட்டு கொசு உற்பத்தி தடுக்கப்பட்டது.

## 26. மருந்தக மருத்துவ அலுவலர்கள்

| | |
|---|---|
| மருந்தக ஆய்வு உதவியாளர்கள் | – |
| சுகாதார இன்ஸ்பெக்டர் | 1 |

## 27. பொது சுகாதாரம் (துப்புரவு பணிகள்)

திரு. பி. ராஜ்மோகன் அவர்கள் அறிக்கையாண்டில் 1.4.2007 முதல் 20.11.2007 முடிய நகர்நல அலுவலர் (பொறுப்பு) ஆகப் பணியாற்றினார். 20.11.07 முதல் 31.3.08 முடிய செல்வி வி.கவிதா,எம்பிபிஎஸ்., அவர்கள் நகர்நல அலுவலராக பணியாற்றி வருகின்றார்.

நகரில் நல்ல முறையில் சுகாதாரம் பேணி காக்கப்பட்டது. கீழே கண்ட பணியாளர்களும், சாதனங்களும் பொது துப்புரவுப் பணிக்காக அறிக்கையாண்டில் பயன்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பயாலஜிஸ்ட் | – | – |
| 2. | துப்புரவு ஆய்வர்கள் | – | 14 |
| 3. | கொசு ஒழிப்பு பிரிவு துப்புரவு ஆய்வாளர் | – | 1 |
| 4. | களப்பணி உதவியாளர் | – | – |
| 5. | சுகாதாரமேற்பார்வையாளர்கள் | – | 12 |
| 6. | துப்புரவு பணியாளர்கள் | – | 351 |
| 7. | மலேரியா மஸ்துார்கள் | – | 20 |
| 8. | லாரி டிரைவர்கள் | – | 14 |
| 9. | டிராக்டர் டிரைவர்கள் | – | – |
| 10. | டிராக்டர் கிளீனர்கள் | – | 2 |
| 11. | ஜீப் டிரைவர் | – | 1 |
| 12. | உதவியாளர் | – | 1 |
| 13. | இளநிலை உதவியாளர்கள் | – | 2 |
| 14. | அலுவலக உதவியாளர்கள் | – | 3 |
| 15. | ஆவண எழுத்தர் | – | 1 (பணியிடம் காலியாக உள்ளது) |

## வாகனங்கள்

| | |
|---|---|
| லாரி | 1 |
| டிராக்டர் | – |
| மினி லாரி | 3 |
| ட்ரெயிலர் | – |

| | |
|---|---|
| குப்பை வண்டிகள் (டிரை சைக்கிள்) | 181 |
| கழிவு நீர் லாரி | 1 |
| மினி ஆட்டோ | 5 |
| டிப்பர் லாரி | 3 |
| டம்பர் பிளேசர் வாகனம் | 3 |

சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரப் பணியாளர்களின் ஊதியம் அறிக்கையாண்டில் ரூ.4,42,000 /– செலவு செய்யப்பட்டது.

நகரம் 15 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு துப்புரவு ஆய்வர் கண்காணிப்பில் பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 28. துப்புரவு தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம்

துப்புரவு தொழிலாளர்களுக்கு 127 நகராட்சி குடியிருப்புகள் உள்ளது. அவைகளில் துப்புரவு தொழிலாளர்கள் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அப் பணியாளர்களுக்கு அரசு வழங்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. அவ்வப்போது அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சார அகவிலைப்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்களுக்கு 2 ஜோடி காக்கி சீருடையும், பெண்களுக்கு 2 பாலியஸ்டர் புடவையும் , துப்புரவு பணியாளர் இருபாலருக்கு ஒரு ஜோடி காலணியும் ஆண்டொன்றுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 29. அச்சம், அருவருக்கத்தக்க தொழில்கள்

அறிக்கையாண்டில் அச்சம் அருவருக்கத்தக்க தொழில்கள் உள்ளது. இத் தொழில்களை ஒழுங்கு முறைப்படுத்தி கட்டுப்படுத்த உப விதிகளும் அமுல் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் கேட்பு வசூல் நிலுவை விபரம் தரப்படுகிறது.

| வருடம் | | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2005–06 | ரூ. | 598582 | 564047 | 34535 |
| 2006 – 2007 | ரூ. | 595684 | 595684 | – |
| 2007–2008 | ரூ. | | | |

## 30 உணவு கலப்படம்

உணவுக் கலப்பட தடைச்சட்டம் கடந்த பல ஆண்டுகளாக இந்நகரில் நடைமுறையில் இருந்து வருகின்றது. அறிக்கையாண்டில் உணவு கலப்பட தடுப்புச் சட்டப்படி உரிமையாணை பெற்று தொழில்கள் நடைபெற்று வந்தன. அறிக்கையாண்டில் இரண்டு நபர்கள் உணவு மாதிரி எடுக்கும் தகுதி பெற்றவர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர். 2007 – 2008ம் ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய வருடாந்திர குறியீடு 96 . இதில் 73 உணவு மாதிரி எடுக்கப்பட்டது. உணவு மாதிரி ரிசல்ட் வரப்பெற்றவை 73 . இதில் கலப்படமற்றவை 39 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் உணவு மாதிரி எடுக்கும் தகுதி பெற்ற ஆய்வர்களாக திரு.பாண்டி, திரு.இராஜகோபால் ஆகியவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். உணவுக் கலப்பட தடுப்புச் சட்ட உரிமக் கட்டணம் ரூ.2,000/– அறிக்கையாண்டில் வசூலாகியுள்ளது.

## 31. சந்தைகளும், திருவிழாக்களும்

உள்ளூர் கோவில் நிர்வாகத்தினரால் வழக்கமாக கொண்டாடப்பட்டு வரும் 4 திருவிழாக்களும் கொண்டாடப்பட்டது. இந்த திருவிழாக்களுக்கு சுற்றுப்புற கிராமஙகளிலிருந்து பெருமளவில் மக்கள் வந்து கூடினர். அவசர கால மல அறைகளும், சிறுநீர் கழிப்பிடஙகளும், தண்ணீர் விநியோகமும் போன்ற பொது வசதிகள் வழக்கம் போல் நகராட்சியால் செய்யப்பட்டது. இதற்காக தற்காலிகமாக தனியாக துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவின் கீழ் எந்த வித மான்யத் தொகையோ, அல்லது உதவித் தொகையோ பெறப்படவில்லை.

### 1. குடிநீர் விநியோகம்

திண்டுக்கல் நகரத்திற்கும், செல்வழி கிராாமஙகளுக்கும் ஒருஙகிணைந்த குடிநீர் திட்டம் அரசு ஆணை எண்.2927 ம்தேதி 6.12.54ல் ரூ.87.32 லட்சத்திற்கு தொழில் நுட்ப அஙகீகாரம் செய்யப்பட்டது. இத் திட்டம், சென்னை தலைமைபொறியாளர் அவர்களால் பல பகுதிகளாக ரூ.94.25 லட்சத்திற்கு தொழில்நுட்ப அஙகீகாரம் அளிக்கப்பட்டது. இதன்படி 1987ம்ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட ஜனத்தொகையாக 1.50 லட்சத்திற்கு தலைக்கு 70 லிட்டர்கள் (15 காலன்) வீதம் மதிப்பீடு திட்டம் தயாரிக்கப்பட்டது. தினம் தலைக்கு 60 லிட்டர் குடிநீர் வழஙகப்படுகிறது. இத் திட்டம் திண்டுக்கல் நகருக்கு 26 கி.மீ.தென்மேற்கில் உள்ள தாண்டிக்குடி, கொடைக்கானல் மலையில், நீர் பிடிப்பு பிரதேசத்தில் உள்ள பெரியாறு, கூழையாறு என்ற இரண்டு ஆறுகள் சேர்ந்த குடகனாறு என்ற ஆற்றைக் கட்டுப்படுத்தி நீர்த்தேக்கம், ஆத்துார் என்னுமிடத்தில் உள்ளது. இந்நீர் தேக்கம் 158.79 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ளதாகவும், இது சுமார் 12 மாதஙகளுக்கு திண்டுக்கல் நகருக்கும், செல்வழி கிராமஙகளான கீழ்க்கண்ட கிராமஙகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

1. சித்தையன்கோட்டை
2.ஆத்துார்
3.சின்னாளபட்டி
4.பித்தைளைபட்டி
5.வக்கம்பட்டி
6.பிள்ளையார் நத்தம்
7.சின்னாளபட்டி,
8.பெரிய பள்ளபட்டி

இத்திட்டம் 1962ம் வருடம் முதல் அமுலாகி தண்ணீர் வழஙகப்பட்டு வருகிறது. தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையம் 1962ம் ஆண்டு நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டு நகராட்சியால் பேணப்பட்டு வருகிறது.

நீர் தேக்கத்திலிருந்து தண்ணீர் 18 அஙகுலம் விட்டமுள்ள இரும்பு குழாய்கள் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து வடிகட்டி, சுத்திகரிக்கப்பட்டு நீர்த்தேக்க தொட்டியில் சேமித்த பின்பு இஙகிருந்து 170 குதிரைத் திறன் உள்ள நீர் உந்து இயந்திரத்தின் மூலம் 22 கி.மீ. தொலைவில் உள்ள திண்டுக்கல் நகரில் பல பாகஙகளுக்கு பகிர்மானக் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உயரமான பகுதிகளுக்கு மலைக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்திலிருந்து 40 குதிரை திறனுள்ள நீர் உந்து இயந்திரம் மூலம் பேருந்து நிலையம் அருகில் உள்ள 2.25 லட்சம் லிட்டர்கள் ( 50,000) கொள்ளளவுள்ள நகர நீர்த் தேக்க தொட்டிக்கு எடுத்துச் சென்று நகரில் பல பாகஙகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போது ஆத்துார் நீரேற்று நிலையத்திலும், மலைக்கோட்டை நீரேற்று நிலையத்திலும் போதுமான பஙகீட்டிலிருந்து மின்சாரம் பெறப்படுகிறது. செம்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து ஆத்துார் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 2.545 லட்சம் செலவில் நேரடி மின் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர தலைமை மின் நிலையத்தில் வடிகால் கிணறுகள் ஏழு திறந்தவெளிக் கிணறுகளை அமைக்கப்பட்டு இதன் மூலம் வறட்சி காலஙகளில் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் திண்டுக்கல் நகரில் நாள் ஒன்றுக்கு விநியோகிக்கப்பட்ட நீரின் அளவு 96 லட்சம் லிட்டர்கள் ஆகும். உந்தப்பட்டு 39 லட்சம் லிட்டர் செல்வழிக் கிராமஙகளுக்கு போக மீதம் 57 லட்சம் லிட்டர் குடிநீர் நகரில் பெறப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் பேரணை மேம்பாடு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பொதுக் குழாய்கள் இருக்கின்றன.

ஒற்றைக் குழாய்கள் –
இரட்டைக் குழாய்கள் –

| | | 1.4.2007 ல் உள்ளபடி | 31.3.2008 ல் உள்ளபடி |
|---|---|---|---|
| 1 | குழாய் விகிதம் | 8941 | 8941 |
| 2 | அளவு கருவி குழாய் விகிதம் (வீட்டு பயனுக்கு) | 8040 | 11596 |
| 3 | அளவு கருவி குழாய் விகிதம் (வீட்டு பயனுக்கு அல்லாதவை | 426 | 470 |
| | | 17425 | 21007 |

அறிக்கையாண்டில் 21007 குழாய் இணைப்புகள் உள்ளது. வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஒரு குழாய் இணைப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 /– ம், இந்த இணைப்பிலிருந்து கூடுதலாக ஒரு இணைப்பு ஏற்படுத்திக் கொண்டால் மாதம் ரூ. 50 /–ம் , இரண்டு இணைப்பு ஏற்படுத்திக் கொண்டால் மாதம் ரூ. 60 /– ம் வசூலிக்கப்படுகிறது

ஒரு குழாய் மாதம் 1க்கு ரூ.45
2 குழாய் மாதம் 1க்கு ரூ.50
3 குழாய் மாதம் 1க்கு ரூ.60

அதிகப்படி குடியிருப்பு 1க்கு குழாய் கட்டணத்துடன் சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வீதம் விதிக்கப்படுகிறது.

<u>அளவு கருவி விகிதம்</u>

வீட்டு பயனுக்கு உபயோகப்படும் இனஙகளுக்கு 1000 லிட்டர் அதன் பாகத்திற்கு ரூ.5.00, வீட்டு பயனல்லாத இனஙகளுக்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.7.50 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

குழாய் விகிதாச்சார கட்டணத் தலைப்பின் கீழ் மற்றும் அளவு மானிய முறை தண்ணீர் கட்டணத் தலைப்பின் கீழ் ஆக மொத்தம் அறிக்கையாண்டில் ரூ. 1,43,46,896/– வருமானம் கிடைத்துள்ளது.

2004–05 ரூ. 12999360
2005–06 ரூ. 11996127
2006–07 ரூ. 14346896

**33. குடிநீர் திட்ட அறிக்கை**

மேலும், திண்டுக்கல் நகரில் விநியோகிக்கப்படும் குடிநீரை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கடந்த 1990ம் ஆண்டு முதல் வைகை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு பேரணை கூடுதல் குடிநீர் திட்டம் ஒன்று ரூ.897.20 இலட்சத்தில் முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு தற்போது 75 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் உந்தப்பட்டு, மேற்படி திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட 17 செல்வழி கிராமங்களுக்கு 19 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் போக, நகருக்கு 56 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் பெறப்பட்டு ,

1. ரவுண்டு ரோடு புதுார்
2. நாகல் நகர்
3.குள்ளனம்பட்டி மேல்நிலை தொட்டியில் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

**குடிநீர் விநியோகிக்கப்படும் செல்வழி கிராமங்கள்:**

1. சித்தர்கள் நத்தம்
2. மல்லையம்பட்டி
3. முசுவனூத்து
4. சொக்குப்பட்டி
5. செஙகோட்டை
6. மைக்கேல் பாளையம்
7. சஙகால் பட்டி
9. ஆச்சிபுரம்
10. கூத்தாம் பட்டி
11.காமுபிள்ளை சத்திரம்
12. திம்ம நாயக்கன் பட்டி
13.பச்சமலையான்கோட்டை
14. செம்பட்டி துணை மின் நிலையம்
15. ஆதிலெட்சுமி புரம்
16. ஆரிய நல்லூார்
17. பஞ்சம்பட்டி

**34. பொது நலமும் தற்காப்பும்**

அரசினர் தீயணைப்பு நிலையம் ஒன்று தீயணைக்கும் துறையின் பொறுப்பில் இயஙகி வருகிறது.

**35. பயன் தரும் மரஙகள் மூலம் வருமானம்**

பயன்தரும் மரஙகள் மூலம் அறிக்கையாண்டில் எவரும் ஏலம் எடுக்கவில்லை. எனவே நடப்பு ஆண்டுக்கு இவ்வினத்தில் வருமானம் எதுவும் இல்லை .

சென்ற ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ.17,000/–

**<u>36 சந்தைகள்</u>**

நகரில் 6 பொது சந்தைகள் உள்ளது. இவற்றில் ஒன்று வாரச் சந்தை, மற்றவை நாளஙகாடிகள். தனியார் சந்தை ஒன்றும் இல்லை. இந்த சந்தைகள் மூலம் ஒவ்வொரு பகுதி மக்களும் நல்ல பயன் அடைந்துள்ளனர்.

1) முனியப்பன் கோவில் தெரு , தினசரி காய்கறி சந்தை (நாகல்நகர்)
2) தெற்கு ரதவீதி தினசரி காய்கறி சந்தை
3) மேற்குரதவீதி தினசரி காய்கறி சந்தை
4) பேகம்பூர் தினசரி காய்கறி சந்தை
5) காந்தி மைதானம் தினசரி காய்கறி சந்தை
6) பாரதிபுரம் வாரச்சந்தை

கடந்த 3 ஆண்டு வருமானம் பின்வருமாறு

| | |
|---|---|
| 2005 – 2006 | ரூ.6,85,664 |
| 2006 – 2007 | ரூ.8,73,098 |
| 2007–2008 | ரூ.9,40,000 |

**<u>37 வண்டி நிலையஙகள்</u>**

இந் நகரில் தனியார் வண்டி நிலையஙகள் எதுவுமில்லை. பழனி ரோட்டில், உலக வஙகி நிதியுதவியுடன் கட்டப்பட்ட நகராட்சி லாரி நிலையம் உள்ளது. அது பொது ஏலத்திற்கு விடப்பட்டது.

அதன் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு கிடைத்த வருமானம் ரூ.2,02,600 /– ஆகும்.

**<u>38 பேருந்து நிலையம்</u>**

நகர்புற ஒருஙகிணைப்பு திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலைய கட்டுமானம் 3 நிலையாக கட்ட உத்தேசிக்கப்பட்டு முதல் நிலை கட்டுமானம் 11 பேருந்து நிறுத்தும் இடத்துடன், 39 கடைகளும் அதன் மேல் முதல் மாடி தஙகும் அறைகளுடன் பிரயாணிகள் தஙகும் அறைகளுடன் கட்டி முடிக்கப்பட்டு பேரூந்து நிலையம் உபயோகத்தில் உள்ளது.

இரண்டாம் நிலையில், சைவ, அசைவ உணவு சிற்றுண்டிச்சாலை கட்டிடம் 18 கடைகள், 18 பேரூந்துகள் நிற்குமிடஙகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடைகளும், உணவு விடுதியும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

நகராட்சி பேருந்து நிலையத்தில் ஒரு பேரூந்துக்கு ரூ.15/– வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.30,54,000/– நாள்தோறும் சுமார் 650 பேருந்துகள், இப் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கிறது. பேருந்து நிலையத்தில் மூன்றாம்நிலை கட்டுமான பணிகள் பகுதி 1, மற்றும் பகுதி 2 , கட்டிடம் கட்ட மதிப்பீடுகள் முறையே ரூ.18 லட்சம், ரூ.14.50 லட்சம் நிர்வாக அனுமதியும் தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டு கட்டிட வேலைகள் முடிவுற்றன. 26 பேருந்துகள் நிற்பதற்கும், 13 கடைகள் கட்டும் பணியும் ஆண், பெண்களுக்கு ஒரு கழிப்பிடமும், ஒரு சாமான்கள் வைக்கும் அறை, ஆண்கள் தங்கும் அறை ஒன்றும் பெண்கள் தங்கும் அறை ஒன்றும் கட்டும் பணி முடிவுற்றன. அவை அனைத்தும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தின் வடபுறம் 54 கடைகள் ரூ.70.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு 2.9.2002ம் தேதி அன்று பொது ஏலம் / டெண்டர் கோரப்பட்டு கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

**<u>39 ஆடு வதைச் சாலை</u>**

ஆடு வதைச் சாலை ஒன்று மட்டும் உள்ளது. கட்டணம் வசூலிக்கும் பணி ஒப்பந்தக்காரர் மூலம் நடைபெற்றது. ஆடு ஒன்றுக்கு ரூ.3.00 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இத்தலைப்பின் கீழ் வரப் பெற்ற வருமானம் பின்வருமாறு

| | |
|---|---|
| 2005–2006 | ரூ.2,06,500 |
| 2006 – 2007 | ரூ.2,11,200 |
| 2007–2008 | ரூ.2,32,000 |

**<u>40. பழத் தோட்டம்</u>**

நகராட்சி மூலம் பழத் தோட்டம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**<u>நகரமைப்பு பிரிவு, நகரமைப்பு பிரிவு அபிவிருத்தித் திட்டம்</u>**

அறிக்கையாண்டில் 1.4.2007 முதல் 31.3.2008 முடிய திரு.ஆ.வரதராஜன் அவர்கள் நகரமைப்பு அலுவலராக பணியாற்றி உள்ளார்.

இப்பிரிவில் கீழ்க்கண்டவாறு அறிக்கையாண்டில் அலுவலர்கள் பணி புரிகின்றனர்.

| | |
|---|---|
| நகரமைப்பு அலுவலர் முதுநிலை | 1 |
| உதவி நகரமைப்பு அலுவலர் | – |
| நகரமைப்பு ஆய்வர்கள் | 3 |
| உதவி பட வரைவாளர் | – |
| உதவியாளர் | – |
| இளநிலை உதவியாளர்கள் | 2 |
| அலுவலக உதவியாளர்கள் | 6 |

அறிக்கையாண்டில் 211 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதன் மீது முடிவு எடுத்து 89 விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 122 விண்ணப்பங்கள் மீது அனுமதி மறுக்கப்பட்டுள்ளன. 480 அனுமதியற்ற கட்டுமானங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அவ்வப்போது அகற்றப்பட்டுள்ளது. கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிமையாணத் தொகை ரூ.8,12,380/– அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டது. அரசாணை எண். 59 / 25.7.06 உத்திரவுப்படி, அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள 355 மனைகள் முறைப்படுத்தப்பட்டு ரூ. 10,64,746 /– வசூல் செய்யப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசாணை எம்.எஸ்.எண்.759 நாள்1.9.93ன்படி கட்டிட அனுமதி உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு நகராட்சியில் உரிமையாணை வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது உள்ளூர் திட்டக் குழுவின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 3.11.99 மற்றும் 15.11.99ம் தேதிய உத்தரவுகளின்படி உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.241/99, டி.எல்.பி.எ.(3) , நாள்: 4.1.2000ல் 200 ச.மீ. பரப்பளவு உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு நகராட்சி ஆணையரே கட்டிட அனுமதி வழங்கலாம் என்றும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கும், உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டுமெனவும் அதிகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## நகரமைப்பு விரிவு அபிவிருத்தித் திட்டம்

1. திண்டுக்கல் மேற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 58.13452 ச.அடி., அரசாணை எண்.1824, பி.எ.ச.நாள்:17.5.1938 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. சௌராஷ்டிராபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 38.11578 சதுரடி அரசாணை எண்.3798, பி.எச்., நாள்: 2.9.41 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3. பாறைக்குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 60.13279 ச.அடி அரசாணை எண்.760, பி.எச். நாள்:2.3.42ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4. அரண்மனைக் குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 20.17048 ச.அடி அரசாணை எண்.737 நி.எச். நாள்:27.2.42ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5. திருவள்ளுவர் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 72.1476 ச.அடி அரசாணை எண்.1877, நாள்: 10.9.73ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

6. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் 1 பரப்பளவு ஏக்கர் 0.113 – 30276 ச.அடி அரசாணை எண்.2458, நாள்: 15.12.69ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

7. போடிநாயக்கன்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 128 – 23622 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் ந.க.எண்.33160/78/டி2, நாள்:5.2.80ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

8. பாரதிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 158–24953 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 18.3.80 நாளிட்ட ந.க.எண்.13553/79 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

9. மேட்டுப்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பாகம் பரப்பளவு ஏக்கர் 133 – 32707 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின்ந.க.எண்.13554/72, நாள்:19.12.79ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

10. மலைக்கோட்டை விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 133,32707 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.1836/79, நாள்:5.2.80 ல் அங்கீகரிக்கப்பட்டுள்து.

11. பென்சனர் தெரு வடக்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 100 – 431 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நக.எண்.15474/77 நாள்:4.8.78ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

12. காந்திஜி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 122–21172 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.13552/79, நாள்:5.2.80ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

13. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் நகராமைப்புத் திட்டம் பாகம் 2 பரப்பளவு ஏக்கர் 187–3929 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20887/84–டி2, நாள்: 30.3.86 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

8. பூச்சிநாயக்கன் பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 101–27242 ச.அடி இத் திட்டம் இணக்கம் பெறப்பட்டுள்ளது.

திண்டுக்கல் முழுமைத் திட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அரசாணை எண்.122, நாள்:16.4.98ல் இணக்கம் அளிக்கப்பட்டு இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அரசாணை எண். எம்எஸ்.759, நாள்:1.9.93ன்படி திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத் தலைவராக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உறுப்பினர் செயலராக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களும் நியமிக்கப்பட்டு உள்ளூர் திட்டக் குழுமம் சம்பந்தப்பட்ட கோப்புகள் விரிவு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் 8.9.93ம் நாள் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. உள்ளூர் திட்டக் குழுமத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த அனைத்து நடவடிக்கைளும் தற்போது திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (எம்.எஸ்) எண்.759, நாள்:1.9.93ன்படி கட்டிட அனுமதி உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு நகராட்சியால் உரிமையாணை வழஙகப்பட்டு வந்தது. தற்பொழுது உள்ளூர் திட்டக் குழுவின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 3.11.99 மற்றும் 15.11.99ம் தேதிய உத்திரவுகளின்படி உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.241/99, டி.எல்.பி.எ.(3) , நாள்: 4.1.2000ல் 200 ச.மீ. பரப்பளவு உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு நகராட்சி ஆணையரே கட்டிட அனுமதி வழஙகலாம் என்றும், குடியிருப்பு அல்லாத கட்டிடஙகளுக்கும், உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டுமெனவும் அதிகாரம் வழஙகப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 41. வருவாய் பிரிவு

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்

| | |
|---|---|
| வருவாய் அலுவலர் | 1 |
| வருவாய் ஆய்வர்கள் | 3 |
| வருவாய் உதவியாளர்கள் | 18 |
| உதவியாளர்கள் | 2 |
| இளநிலை உதவியாளர்கள் | 11 |
| அலுவலக உதவியாளர்கள் | 2 |

அறிக்கையாண்டில் வருவாய் பிரிவு பணியாளர்களுக்கான செலவுத் தொகை ரூ 42,79,944 ./– சென்ற ஆண்டில் செலவு ரூ. 36,99,072 /–

கீழ்க்கண்ட விகிதப்படி ஆண்டு வாடகை மதிப்பில் அரையாண்டிற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| பொதுக் காரியஙகளுக்கு | 9.19 |
| தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4.00 |
| கல்வி வரி | 2.50 |
| | --------- |
| | 15.69 % |
| | --------- |

என்ற விகிதப்படி சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

நூலக வரியாக சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசாவாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

<u>சொத்து வரி</u>

அறிக்கையாண்டில் சொத்துவரி கேட்பு வசூல் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

<u>கேட்பு ( லட்சத்தில்)</u>

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 315.09 | 454.30 | 769.39 |

<u>வசூல் ( லட்சத்தில்)</u>

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 90.69 | 336.76 | 427.45 |

<u>நிலுவை ( லட்சத்தில்)</u>

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 224.40 | 117.54 | 341.94 |

<u>வசூல் சதவீதம்</u>

| நிவை | கேட்பு | மொத்தம் |
|---|---|---|
| 29 சதவீதம் | 74 சதவீதம் | 56 சதவீதம் |

**<u>தொழில் வரி</u>**

அறிக்கையாண்டில் 9074 நபர்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது.

| கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 62.14 | 58.09 | 3.95 |

**<u>வரியில்லாத இனம் (நடப்பு மற்றும் நிலுவை)</u>**
**<u>கேட்பு</u>**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 280.90 | 360.88 | 641.78 |

**<u>வசூல்</u>**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 27.20 | 142.17 | 169.37 |

**<u>நிலுவை</u>**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 253.70 | 218.71 | 472.41 |

வரியினம் மற்றும் வரியில்லா இனம் ஆகிய இனஙகளில் நிலுவையின்றி வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனையடி வரி அதன் கிரைய மதிப்பில் விதிக்கப்படுகிறது. அரசின் நிலஙகள் மலையடி வரியிலிருந்து விலக்கிற்குரியது. விளை நிலம் தவிர, காலி மனைக்கு மனையடி நிலஙகளின் பெயரில் அதன் கிரய மதிப்பில் அரையாண்டுக்கு 1 சதவீதம் விதிக்கப்படுகிறது. பொதுக் காரியஙகளுக்கான வரி விகிதாச்சாரத்தில் ரூ.1.00 க்கு 0.10 வீதம் நூலக வரியும் விதிக்கப்பட்டுள்ளது. நூலக வரி முழு ரூபாய்க்கு 0.10 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது.

நூலக வரியாக அறிக்கையாண்டில் ரூ.33,03,020/– லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>42. கணக்குகள்</u>**

2007 – 2008ம் அறிக்கையாண்டில் ஆரம்ப கையிருப்பு ரூ. 45369091 / – ம் முடிவு கையிருப்பு ரூ. 9,48,25,771 / – ம் இருந்தது.

## கடன்கள்

அரசாணை (நிலை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( நப–3) துறை, நாள் 10.7.98ன்படி அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் உள்பட அனைத்து கடன்களுக்கும் (எம்.யு.டி.எப்., ஐ.யு.டி.பி தவிர) அசல் மற்றும் வட்டித் தொகையையும் சேர்த்து ஒரே கடன் தொகையாக தொகுக்கப்பட்டுள்ளது. அதன்படி அறிக்கை ஆண்டில் நிலுவையாக இருந்த கடன் தொகை ரூ.15,19,23,998/– அறிக்கையாண்டில் கடன் தொகை பெறப்படவில்லை. எல்லாக் கடன்களும் சேர்த்து 31.3.2007 முடிய அசல் மட்டும் ரூ.12,53,00,445/– செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த கடன் தொகை ரூ.2,66,23,553/– ஆகும். அதன் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| அரசு | ரூ. – |
| எம்.யு.டி.எப் | ரூ. 63,75,769 |
| ஐ.டி.எஸ்.எம்.டி. | ரூ. 35,87,878 |
| டுபிட்கோ (Own fund) | ரூ. 5,21,627 |
| டுபிட்கோ (சாலைகள்) | ரூ. 1,39,42,000 |
| ஐ.யு.டி.பி | ரூ. 21,96,279 |
| **மொத்தம்** | **ரூ. 2,66,23,553** |

நகராட்சி அரசு மான்ய கடன் அசல் மற்றும் வட்டி ரூ. 25,31,49,437 /– தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. அரசாணை எண். 149, நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் துறை நாள் 9.11.2007.

## சொர்ண ஜெயந்தி சஉறரி ரோஜ்கார் யோஜனா திட்டம்

1.12.97 முதல் நகர் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் மேம்பாடு அடையும் வண்ணம் மத்திய மற்றும் மாநில அரசு நிதிகள் மூலம் நகர்ப்புற பகுதியில் பொன் விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் பொன்விழா ஆண்டு கூலி வேலை வாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1. நகர்புற சுய வேலை வாய்ப்பு திட்டம்

இத் திட்டத்தின்கீழ் அ) தனி நபர் வஙகி கடன் ஆ) சுய தொழில் பயிற்சிகள் இ) உள் கூட்டமைப்பு ஆகிய மூன்று பிரிவுகளில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி 2007 – 2008 ம் ஆண்டுக்கான நிதி வழஙகப்பட்டது.

அ) தனி நபர் வங்கிக் கடன்

சுய வேலை வாய்ப்பு திட்டத்திற்கு ரூ.2,49,250/– மத்திய மற்றும் மாநில அரசு நிதி அறிக்கையாண்டில் பெறப்பட்டது. மேற்காணும் நிதியின் தனி நபர் வங்கிகள் 71 பயனாளிகளுக்கு வழஙகப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியில் ரூ.2,49,250/– மானியம் சேர்த்து வஙகிகள் மூலம் ரூ16,62,000/ லட்சம் தனி நபர் வஙகி கடன் வழஙகப்பட்டுள்ளது.

ஆ) சுயதொழில் பயிற்சி

பொன்விழா ஆண்டு நகர் புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் நகர்புற ஏழை மக்கள் பயனடையும் வகையில் கணிப்பொறி பயிற்சி, இலகு ரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் பெண்கள் பயனடையும் வகையில் பொம்மை தயாரிப்பு ஆகிய பயிற்சிகள் 134 நபர்களுக்கு வழஙகப்பட்டுள்ளது. மேற்காணும் பயிற்சிக்கு அறிக்கையாண்டில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி ரூ.2.68 லட்சம் பயனாளிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

இ ) 2007–08 ல் உள் கட்டமைப்பு நிதி ஏதும் பெறப்படவில்லை

<u>பொன்விழா ஆண்டு நகர்புற வேலை வாய்ப்பு திட்டம் சமுதாய கட்டமைப்பு</u>

இத் திட்டத்தின் கீழ் சமுதாய கட்டமைப்புக்காக 2007–08 ம் ஆண்டு மத்திய மற்றும் மாநில அரசு நிதி ரூ. 3.33 லட்சம் விடுவிக்கப்பட்டது . இதில் 600 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பதிவேடுகள் வழங்கப்பட்டது .

<u>பொன்விழா ஆண்டு நகர்புற கூலி வேலை வாய்ப்பு திட்டம்</u>

இத் திட்டத்திற்கு இந் நகராட்சிக்கு வரப் பெற்ற நிதிகள் ரூ.7.90 லட்சத்தை கொண்டு நகர் பகுதிகளின் அடிப்படை வசதிகளான சாக்கடைகள் அமைக்கும் பணி 4, 8, 11, 31, 32, 38, 39, 47 ஆகிய வார்டுகளில் 9 பணிகள் நடைபெற்றுள்ளது. மேற்காணும் பணிகளுக்கு அறிக்கை ஆண்டில் ரூ.5.64 லட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

<u>**தணிக்கை**</u>

| | | |
|---|---|---|
| 1.4.2007 ல் நிலுவையாக உள்ள தணிக்கை தடைகள் எண்ணிக்கை | | |
| அறிக்கையாண்டில் பெறப்பட்டது | –– | 4902 |
| மொத்தம் | | |
| அறிக்கையாண்டில் நிவர்த்தி செய்யப்பட்டது | – | 262 |
| ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ளது | –– | 4640 |

விரைவில் தணிக்கைத் துறையினருடன் கூட்டமைப்பு நடத்தி தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>சிறு சேமிப்பு</u>**

2007 – 2008ம் ஆண்டுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இந் நகராட்சிக்கு சிறு சேமிப்பு குறியீடு 200 லட்சமாகும். அறிக்கையாண்டில் ரூ.86.00 லட்சம் மட்டும் வசூல் செய்யப்பட்டது. இது மொத்த குறியீட்டுக்கு 43% சதவீதமாகும்.

**<u>அறக்கட்டளை</u>**

இத் தலைப்பின் கீழ் நிதிக் கணக்கு இல்லை.

**<u>பொது</u>**

நகர் மன்ற தலைவர், நகர் மன்ற துணைத் தலைவர், மற்றும் மன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ஆணையர் நல்லுறவு நிலவியது. நகர்மன்ற தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் நகரின் பல்வேறு அபிவிருத்தி பணிகளும், சீரான குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகளும் ஒருமித்த கருத்தோடு செய்து முடிக்கப்பட்டது.

ஆணையர் மற்றும் பிரிவு அலுவலர்களிடையே நேசமும் நல்லுறவும் நிலவியது. நகராட்சி பொறியாளர், நகர் நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், வருவாய்அலுவலர், மேலாளர், கணக்கர் மற்றும் அனைத்து பிரிவு பணியாளர்களின் பூர்ண ஒத்துழைப்பு இருந்தது. அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையர் (பொ)**
**திண்டுக்கல் நகராட்சி**